**தலைப்பு 205 - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

**..........................................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**......................................................**

தலைப்பு 205- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

**…………………………………………………………………………………………………………..........**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு**

**………………………………………………………….......................………………..**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2.3 (இ) | நீதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதியற்ற சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 1.6 நிதிக்கூறறுக்கள் தொடர்பான கருத்துரைகள்

..........................................................................

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

......................................................

#### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

............................................................................

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | ....................................... | ......................... |
| நீதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கியிருந்த 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பெறுமதியை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்களத்தின் வாகனங்களின் பெறுமதியை நிதியற்ற சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### (ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

..................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | ....................................... | ......................... |
| நிதிப்பிரமாணம் 891 (1) இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய ஒரு பிணைப் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 880 இற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து பிணைப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு வைப்புச் செய்ய வேண்டிய பிணைப் பணத்தின் அளவும் தீர்மானிக்கப்பட்டு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பிணைப் பணத்தினை வைப்புச் செய்யும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க சேவை பரஸ்பர உத்தரவாத சங்கத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891 (1) இல் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 880 இற்கு இணங்க பிணைப் பணத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**........................**

**2.1 வருமான முகாமைத்துவம்**

**..................................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................. | .................................. | ...................... |
| 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்கள் தொடர்பாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட மூலதனம், முதலீட்டு வருமானக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களாக ரூபா 8,500,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 19,214,500 வருமானம் சேகரிக்கப்பட்டது என 2023 மார்ச் 10 ஆந் திகதியின் PT/2/CA/3/3/5/2 (II) அலகு ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அது மதிப்பீட்டின் 226 சதவீதமாகும். அதற்கிணங்க மதிப்பீடு செய்வதில் ஒரு பலவீனம் அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தில் புதிய நம்பிக்கைப் பொறுப்பு/ மரணச் சொத்தினை தோற்றுவித்தல், குடியிருப்பு இழப்பீடு, வெளிநாட்டு இழப்பீட்டு பணத்தை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளல் மற்றும் வட்டி வீதத்தில் மாற்றம் என்பன தொடர்பாக சரியாக எதிர்வு கூறலினை மேற்கொள்வதிலுள்ள சிக்கல்களின் அடிப்படையில் வருமானங்களுக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே முரண்பாடுகள் உருவாகியிருந்தது. | வருமான மதிப்பீட்எனை சரியாக தயாரித்தல் வேண்டும். |

**2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

**.....................................................................................................................................**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளனின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்துதல்கள் செய்யப்பட வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................. | .................................. | ...................... |
| (i) திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பிரதான பிரிவாகிய நம்பிக்கைப் பொறுப்பு மரணச் சொத்தின் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தலானது புதிய | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக ஏற்கனவே மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் செய்து அதன் ஒரு பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கீட்டு மென்பொருளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக கணக்காய்விற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கையும் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்திற்குள் தயாரித்தல் இடம்பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.1 (அ) ஆம் பந்தியில் குறிப்பிட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள், செயல் நடவடிக்கைத் திட்டம், அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் சம்பந்தமாக நி.பி (506) ‘‘பீ’’ இன் பிரகாரம் வருடாந்த கணக்கிணக்க கூற்றுக்கள் நிர்ணயிக்கப்பட்டட்ட காலப்பகுதிக்குள் வழங்கப்பட்டிருந்தும் நம்பிக்கைப் பொறுப்பு மரணச் சொத்து இறுதிக் கணக்குகளை வழங்கும் போது காலதாமதம் இடம்பெற்றிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பினை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தாமதம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் வரைபு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் 47 (1) ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பு/ மரணச் சொத்து கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் ஒரு பகுதி மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு/ மரணச் சொத்தின் இறுதிக் கணக்குகள் இவ்வறிக்கைத் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான தனிநபர் நம்பிக்கைப் பொறுப்பு, புலனாய்வு, மருத்துவ உதவி ஆகிய பிரிவுகளின் இறுதிக் கணக்குகள் புதிய நம்பிக்கைப் பொறுப்பு மரணச் சொத்து முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரிவுகளின் இறுதிக் கணக்குகளை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்குகளை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க | எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான வித்தியாசங்கள் காணப்படுமாயின் அவற்றினை இனங்காண்பதற்காக | பொழிப்பு அறிக்கையினைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு போக்குவரத்து சேவை குறிப்பினை மாதாந்தம் பூரணப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது கிடைத்துள்ளது. | |
| (iii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 4/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அரசாங்க நிறுவனங்களுக்காக காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது சந்தையில் செயற்படும் இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்த அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை கோருவதன் மூலம் காப்புறுதிப் பூட்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் வாகனங்களுக்காக விலை மனுக்கள் கோராது நேரடியாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து காப்புறுதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மோட்டார் வாகன காப்புறுதி நடவடிக்கையானது அரசாங்க நிறுவனமாகிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் எதிர்காலத்தில் காப்புறுதிச் சபையில் பதிவுசெய்த நிறுவகனங்களிடமிருந்து விலை மனுக்களை கோரி காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | வருடாந்த பொருள் மீளாய்வினை மேற்கொண்டு அதன் அறிக்கையினை அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கை 03 மாத கால தாமதத்தின் பின்னர் 2022 யூலை 21 ஆந் திகதி | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் தொடர்பாக தோட்டங்களின் பொருள் மீளாய்விற்காக மீளாய்வுச் சபை தற்பொழுது நியமிக்கப்பட்டுள்ளதுடன் பொருள் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற 11 தோட்டங்கள் தொடர்பாக பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (v) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தி | பொருள் மீளாய்வுச் சபையினை நியமித்தலானது உரிய ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் தொடர்பான பொருள் மீளாய்வுச் சபையினை நியமித்தலானது உரிய காலப்பகுதிக்குள் இடம்பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொருள் மீளாய்வுச் சபையினை நியமிப்பதற்கு அறிவுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | உரிய காலப்பகுதிக்குள் பொருள் மீளாய்வுச் சபையினை நியமித்தல் இடம்பெறுதல் வேண்டும். |

## 2.4 வங்கி கணக்குகளின் செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் பேணாப்படுகின்ற பொது நடைமுறைக் கணக்கினால் பல ஆண்டுகளாக இனங்காணப்படாத நேரடி பெறுவனவுகள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டதுடன் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று தயாரித்த வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத நேரடிப் பெறுவனவுகளின் மொத்தம் ரூபா 2,719,188 ஆகும். | தற்பொழுது இந்த நேரடிப் பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்காணப்படாத நேரடிப் பெறுவனவுகளை விரைவாக இனங்கண்டு முறைப்படியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

.....................................

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

...............................................................

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.ள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................................ | .................................... | ...................... |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு 2022 நவம்பர் 16 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பினை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் தற்பொழுது வரைபு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கையினை உரிய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தினால் இனங்காணப்பட்டுள்ளன 10 செயலாற்றல் குறிக்காட்டிகளில் 03 செயலாற்றல் குறிகாட்டிகளின் உள்ளபடியான வெளியீடுகளானது எதிர்பார்த்த வெளியீட்டில் 50 சதவீதத்தினைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் தோட்ட முகாமைத்துவ பிரிவின் எதிர்பார்த்த வெளியீடானது 54 சதவீதமான மறைப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. | நெருக்கடியான நிலைமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிலையான வைப்பு வட்டிப் பணத்தின் காசோலைகள் கிடைக்காமையும் தபால் சேவைகள் செயற்பாடற்றதனால் வவுச்சர்/ கடிதங்கள் முதலியவற்றினை அனுப்புதல் மற்றும் | இனங்காணப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்க்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளுதல் தாமதித்ததன் காரணமாக வருடத்திற்குரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது கடந்த ஆண்டில் அதிக காலம் பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக அறிக்கைகளை கோருவதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் புலமைப்பரிசில் கொடுப்பனவு நடவடிக்கை தடைப்பட்டிருந்தது. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

..................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................................ | .................................... | ...................... |
| (அ) பல்வேறு மரணச் சொத்துக்களின் ஒப்படைக்கப்பட்டிருந்த 11 தோட்ட ஆதனங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் பொது நம்பிக்கை பொறுப்பாளரினால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆதனங்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்து அவற்றின் வருமானத்திலிருந்து தோற்றுவிப்பாளரின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இத்தோட்டங்களின் வருமானங்களை அதிகரிப்பதன் மூலம் உரிய மரணச்சொத்து உரிமையாளரின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தோட்டங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தோட்டங்கள் சம்பந்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் தோட்டங்களின் ஒட்டுமொத்த தேறிய நட்டம் ரூபா 2,526,485 ஆக உருவாகியிருந்தது. | | |
| (ஆ) | முழுமையான காணியின் விஸ்தீரணம் 17 ஏக்கர்களாகிய ஹெரி கப்புகொட மரணச் சொத்தின் காலி நியாகம பிரதேசத்திலுள்ள மத்தக வத்த என்ற பெயரிலான காணியில் 1 ஏக்கர் 1 ரூட் 2 பேச்சர்ஸ் அளவிலான காணி உறுதியாக அடையாளங்காணப்பட்டு பாதுகாப்பு எல்லையினை நிர்ணயிப்பதற்கும் பாதுகாப்பு வேலியினை நிர்ணயித்து விவசாய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமை சாதகமற்றதாக உள்ளதனால் இப்பிரிவின் பயிர்ச்செய்கை நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. எனினும் நிதி நிலைமை சாதகமாகியுள்ளதனால் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இக்காணியை உறுதியாக அடையாளங்கண்டு அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பு வேலியினை நிர்ணயித்து விவசாய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | ஹெரி ஹபுகொட மரணச் சொத்தின் சுதுவெலிபொத தோட்டத்தில் அன்குதுவ எனும் பெயருள்ள காணித் துண்டில் 13.5 ஏக்கர் அளவிலான இறப்பர் பயிர்ச் செய்கை பண்ணக் கூடிய காணியில் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இத்தோட்டத்தில் காணப்பட்ட அதிகாரமற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாகவும் திணைக்களத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய தோட்டத்தில் அமைந்துள்ள தோட்ட பங்களாவினை துரிதமாக திருத்தம் செய்தல் அத்தியவசியமானது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | ஹெரி ஹபுகொட மரணச் சொத்தின் அன்குதுவ எனும் பெயருள்ள 13.5 ஏக்கர் அளவிலான காணியில் பழைய இறப்பர் பயிர்களானது ஆண்டின் போது விலை மனுக் கோரி விற்பனை செய்தல் இடம்பெற்றுள்ளது. நிதி நிலைமையானது சிறப்பற்றதாக காணப்பட்டதனால் மீண்டும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக நிதியினை வழங்கும் சிக்கல் உருவாகியிருந்தது. எதிர்காலத்தில் இக்காணியை அபிவிருத்தி செய்தல் அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மீள் பயிர்ச் செய்கைக்காக அரசாங்கத்தின் உதவியினைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையினை கவனித்துப் பார்த்தல் மற்றும் அதிகாரமற்ற நிர்மாணங்கள் காணப்படும் தோட்டங்களில் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிகாரமற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாக சட்டரீதியான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | என்.டி.எஸ் சில்வா விஜேசிங்ஹ மரணச்சொத்திற்குரிய களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள ரிச்மன் மாளிகையானது 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுடனான | மாளிகையின் பின்பக்கத்திலுள்ள கூரையில் மழை நீர் வடிந்தோடி திருத்தம் செய்யப்பட்டு பூச்சுப் பூசுதல் நடவடிக்கையானது 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் | மாளிகை மற்றும் அதில் காணப்பட்ட அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் ஏனைய அரும்பொருட்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பழமைவாய்ந்த முக்கியத்துவமான அலங்கார மாளிகை என்பதனால் துரிதமாக பேணிப் பாதுகாத்தல் அத்தியவசியமானதாகக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மேற்கூறிய மரணச் சொத்தின் இறுதி விருப்புப் பத்திரத்தில் பழமை வாய்ந்த பெறுமதி மிக்க அரும்பொருள் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த அரும்பொருளானது மேலே குறிப்பிட்ட மாளிகையில் வைக்கப்பட்டு பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த அரும்பொருளுக்கு மத்தியில் சில அரும் பொருட்கள் மாத்திரம் திணைக்களத்தின் பாதுகாப்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன எனவும் ஏனைய அரும் பொருட்கள் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | நிலைப்பாட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபா 150,000 பணம் செலுத்தப்பட்டது. அவ்வாறே திருத்தம் செய்வதற்காக அதிகளவு பணம் செலவு செய்யப்பட்டதனால் பாதுகாப்புப் பிரிவின் ஊழிய பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு செயலாளரின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | காணப்படும் இடங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கும் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஐ.டபிள்யூ. சீ விஜேரத்ன மரண சொத்துக்குரிய நோட்டன் பிரிஜ்ஜில் அமைந்துள்ள வீடு மற்றும் காணியை 1993 திசெம்பர் 07 ஆந் திகதி ஒரு முதியோர் இல்லத்தினை பேணுவதற்காக கினிகத்தேன பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் மரணச் சொத்திற்குரிய நிரந்தர ஆதனத்தை ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைக்கும் போது வீட்டினை ஒப்படைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக முறைப்படியான இணக்கப்பாட்டினை உருவாக்கிக் கொள்வதற்காக உடன்படிக்கை | கினிகத்தேன பிரதேச செயலாளரின் தலைமையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினைத் தோற்றுவிப்பதற்கும் முதியோர் இல்லத்தினைப் பேணுவது தொடர்பாக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராக பொதுத்திறைசேரியினை நியமித்து ஒரு நம்பிக்கைப் பொறுப்பினைத் தோற்றுவிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளித்தரப்பினர்களுக்கு மரணச் சொத்து ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது முறையான குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்துகொள்ளப்பட வேண்டிய போதிலும் 29 ஆண்டுகள் கடந்திருந்தும் முறைப்படியான உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. | | |
| (ஊ) | சீ.ஈ வணிகசூரிய மரணச் செத்திற்குரிய ஆதனங்களை விற்பனை செய்து மரணச் சொத்து உடமையாளரின் பெயரில் ஒரு நம்பிக்கைப் பொறுப்பினைத் தோற்றுவிப்பதற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு 2005 நவம்பர் 10 ஆந் திகதி சட்டபூர்வ அதிகாரம் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும் அந்த மரணச் சொத்திற்குரிய சில ஆதனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் ஏனைய ஆதனங்களின் உரிமையாண்மையினை இனங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பதற்கும் அந்த ஆதனங்களை விற்பனை செய்து மரணச் சொத்தாளரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி விருப்பு பத்திரத்திற்கு இணங்க சீ.ஈ வணிக சூரிய மரணச் சொத்திற்குரிய ஆதனங்களில் சில முறைப்படியாக இனங்காணப்பட்டு அந்த ஆதனங்கள் விற்பனை செய்யப்பட்டு சீ.ஈ வணிக சூரிய நம்பிக்கைப் பொறுப்பு என்ற பெயரில் வைப்புச் செய்யப்பட்டு தற்பொழுது உரிய நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதற்கு மேலதிகமாக ஏனைய ஆதனங்களுக்காக சீ.ஈ வணிக சூரிய அவர்களுக்கு பகிரப்படாத பங்குரிமையே உள்ளது. அதற்கிணங்க உரிய உரிமையாண்மையை இனங்காணுதல் வேண்டும். அந்த பகிரப்படாத ஆதனங்களில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் வசித்து வருவதனால் அதற்காக முறையான நீதிமன்ற நடவடிக்கை எடுத்து தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ளது. | உரிய காணி மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்தி மரணச் சொத்தாளரின் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

.................................................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ................................................ | .................................... | ...................... |
| 2007 சனவரி 27 ஆந் திகதி 65-0763 ஆம் இலக்க வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக ரூபா 254,038 தொகையான நட்டத்தை உரிய சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்காக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு சம்பந்தமாக | இந்த விடயத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காக மூன்று நபர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | நட்டத்தை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக காலங்கடந்ததன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன் விபத்து இடம்பெற்று 15 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய நட்டத்தை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினரிடமிருந்து அறவீடு செய்து ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பொருதத்மான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) டீ.எஸ்.டபிள்யூ சமரகோன் அவர்களின் மரணச் சொத்திற்குரிய சயிமன்டேல் வத்த காணியில் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 16 ஏக்கர் 01 ரூட் 35 பேச்சர்ஸ் காணிக்காக தீர்மானிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் சம்பந்தமாக கெஸ்பேவ பிரதேச செயலகத்தினால் இரண்டு சந்தர்ப்பங்களில் முறையே ரூபா 2.63 மில்லியன் மற்றும் ரூபா 1.79 மில்லியன் என தெரியப்படுத்தப்பட்டிருந்தும் உரிய வித்தியாசத்தினைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை இவ்வறிக்கைத் திகதி வரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட காணியில் மூ.பி 8043 ஆம் இலக்க பகுதியானது கிராமங்களை விரிவுபடுத்தலின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ஒப்படைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிப்பகுதியாகும். ஏனைய காணிப்பகுதிகளுக்கான இழப்பீடு மற்றும் அதற்கான வட்டி கிடைத்துள்ளது. 8043 ஆம் இலக்க திட்டவரைபட பகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணத்தையும் வட்டியையும் கொடுப்பனவு செய்யுமாறு கெஸ்பேவ பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பண வித்தியாசம் சம்பந்தமாக கெஸ்பேவ பிதைேச செயலாளரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தீர்த்து வைப்பதற்கு பிரதேச செயலகம் மேலதிக சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றது என தெரிவித்துள்ளது. அது சம்பந்தமாகவும் | அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மரணச் சொத்து காணிக்குரிய இழப்பீட்டுப் பணத்தையும் வட்டியையும் மரணச் சொத்திற்காக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணம் சம்பந்தமாகவும் 2023-03-17 ஆந் திகதி மீண்டும் விசாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1968 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சிங்கப்பூரில் மரணமடைந்த திருமதி புளோரன்ஸ் ஈனிட் விதம் அவர்களின் இலங்கையில் காணப்படும் நிலையான மற்றும் அசையும் ஆதனங்களை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தை வாரிசுகளுக்கு/ சட்டரீதியான உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு சட்டரீதியாக அதிகாரம் பெற்றவராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஆதனங்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 64,645,776 பணத்தில் 30 வாரிசுக்காரர்கள் / சட்டரீதியான உரிமையாளர்களுக்கு ரூபா 35,880,064 பணம் வழங்கப்பட்டிருந்தும் 16 நபர்களுக்கு வழங்க வேண்டிக் காணப்பட்ட ரூபா 28,765,712 பணமானது ஆதனங்கள் விற்பனை செய்யப்பட்டு 23 ஆண்டுகள் கடந்திருந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாரிசுக்காரர்களை தேடிக்கண்டு பிடிப்பதற்கான பகிரங்க அறிவித்தலானது 2010-11-12 ஆந் திகதி சிங்களம் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க முன்வந்துள்ள 36 வாரிசுக்காரர்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. மிகுதி 16 நபர்கள் முன்வந்திருக்காததனால் அப்பணம் 2019 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டது. இந்த உரிமைக்காரர்களில் பலர் வெளிநாடு சென்றுள்ளதுடன் அவர்களை தொடர்புகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அது வெற்றியளித்திருக்கவில்லை. | வாரிசுக்காரர்களுக்கு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் பணத்தை செலுத்தும் வரை நிதியை வினைத்திறனாக முதலீடு செய்தல் வேண்டும். |
| (இ) | ஆர்.எல்.எச் சந்திர சேகர் என்ற நபரின் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பொதானேகமவில் அமைந்துள்ள காணி சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரிமையாகவிருந்த 30 பேச்சர்ஸ் மேட்டுக் காணி மற்றும் 05 ஏக்கர் வயல் காணிக்காக தற்காலிக நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தும் முறைப்படியான குத்தளை | இந்த மரணச் சொத்து தொடர்பாக இடம்பெற்ற 1/99T ஆம் இலக்க வழக்கில் பொது நம்பிக்கையாளருக்கு பாதகமான வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டதனால் அனுராதபுரம் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு கோவை செய்யப்பட்டிருந்தது. உரிய வழக்கில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு 30 | வெளித்தரப்பினர்களுக்கு மரணச் சொத்து ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது ஆதனங்களின் பாதுகாப்பினையும் அதிலிருந்து நியாயமான வருமானம் பெற்றுக் கொள்வதனையும் உறுதிப்படுத்துவதற்காக முறையான குத்தகை உடன்படிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு இவ்வறிக்கைத் திகதி வரையும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உறுதியாக குத்தகைக் காரரினால் பயிர்ச் செய்கை மேற்கொண்ட வயல் காணியின் அளவு, மேட்டு காணியின் அளவு மற்றும் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் சம்பந்தமாக மேற்பார்வை அல்லது பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் குத்தகைதாரரினால் அவரின் விருப்பத்தின் பேரில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணம் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | பேச்சர்ஸ் மேட்டுக் காணியும் 05 ஏக்கர் வயல் காணியும் உரித்துடையதாகும். வழக்கு நடைபெற்ற சந்தர்ப்பத்தில் வயல் காணியானது தற்காலிகமாக குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவரினால் அரசாங்கத்தின் இணக்கப்பாட்டின் அளவுக்கு இணங்க குத்தகைப் பணம் செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. வழக்கு இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் புதிய குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க முறையான குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் குத்தகைப் பணத்தை செலுத்த தவறியுள்ள ஆதனங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 ஆம் ஆண்டு வரை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யப்படாத வீரசிங்க அபேநாயக மரணச் சொத்திற்குரிய மாத்தறை களஞ்சிய வீதியிலுள்ள 32 பேச்சர்ஸ் பரப்பளவான காணியும் கட்டிடமும் 2013 பெப்ரவரி 05 ஆந் திகதி ரூபா 8,000 மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கையானது 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. இந்த ஆதனத்தை விற்பனை செய்வதற்காக 97/16 ஆம் இலக்க வழக்கின் கீழ் 2016 செப்தெம்பர் 29 ஆந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் ஆதனத்தை விற்று நிதியை செலவு வைப்பதற்கு பதிலாக முறையான குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்படாது மேற்கூறிய குத்தகைதாரருக்கே ரூபா | நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ஆதனத்தை விற்கும் வரை தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது என கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. பின்னர் அதிகாரமற்ற குடியிருப்பாளர் ஒருவரின் காரணமாக அவரை நீக்குவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் இதுவரை ஆதனத்தை விற்பனை செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2023 யூலை மாதம் 04 ஆந் திகதி வழக்கு விசாரணை செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | விற்பனை செய்வதற்காக நீதிமன்ற அனுமதியைப் பெற்ற காணியையும் கட்டிடத்தையும் விற்பனை செய்து மரணச் சொத்தின் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10,000 மாதாந்த பணத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | டீ.ஜே.டீ.ஜே அபேசேகர மரணச் சொத்துக்குரிய காலி எல்பிடிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கடையும் காணியும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உடன்படிக்கை செய்யப்படாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,100,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட இக்கடைக்காக 2018 மே மாதம் வரை ரூபா 227,380 தொகையும் காணிக்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 143,400 தொகையுமாக குத்தகை வாடகை அறவீடு செய்யப்பட வேண்யிருந்தது என கணிப்பீடு செய்யப்பட்டிருந்தும் குத்தகை வாடகையினை அறவீடு செய்வதற்கு இந்த அறிக்கைத் திகதி வரையும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மரணச் சொத்துக்குரிய ரூபா 2,300,000 மதிப்பீட்டுப் பெறுமதியான காணி தற்பொழுது விற்பனை செய்யப்பட்டுள்ளது. ரூபா 1,100,000 பெறுமதியான கடையின் குத்தகை வாடகையினை செலுத்தாது குடியிருப்பதற்காக நீதிமன்ற கட்டளை அனுப்பிவைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக 1 1/2 ஆண்டுகளுக்குள் கொள்வனவு செய்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அது சம்பந்தமான சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வெளித்தரப்பினர்களுக்கு மரணச் சொத்து ஆதனங்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது ஆதனங்களின் பாதுகாப்பியையும் அவற்றிலிருந்து நியாயமான வருமானத்தினையும் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக முறையான குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டும். மற்றும் குத்தகை செலுத்த தவறியுள்ள ஆதனங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நுகேகொடை பிரதேசத்தில் வசித்து வந்த ஜீ.எஸ் ஜயசூரிய எனும் பெயருள்ள நபரின் மரணச் சொத்து சம்பந்தமான சட்டரீதியான அதிகாரம் 1982 ஆம் ஆண்டின் போது பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கிடைத்திருந்ததுடன் மரணச் சொத்தாளரின் மரணமடைந்த முதலாவது மனைவிக்குச் சொந்தமான ஒரு காணி 1999 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவரின் இறுதி விருப்பு பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் அக்காணிக்காக மரணச் சொத்தாளருக்கு உரிமை இருக்கவில்லை. எவ்வாறாயினும் அக்காணிக்காக ஒரு வழக்கு | ஜீ.எஸ் ஜயசூரிய மரணச் சொத்தின் மூலம் குறிக்கோளினை நிறைவேற்றுதலானது 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. மனைவியின் ஆதனத்திற்காக மரணச் சொத்தாளருக்கு தகமையுள்ள உரிமையின் பிரகாரம் திணைக்களத்தினால் இழப்பீட்டினை வேண்டி இழப்பீடு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஏனைய தரப்பினர்களால் உரிமை கோரப்பட்டிருந்ததனால் பிரதேச செயலகத்தினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை பிரதிவாதியாக்கி வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் பொது நம்பிக்கைப் | திணைக்களத்திற்கு சட்டரீதியான உரிமையுள்ள ஆதனங்கள் சம்பந்தமாக மாத்திரம் வழக்கு செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடுக்கப்பட்டு இழப்பீட்டு உரிமையினை வேண்டி 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 2,962,430 செலவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர் 23 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட 522/00 விசேடம் ஆம் இலக்க அந்த ஆதனம் தொடர்பாக இழப்பீட்டு உரிமை இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனவே உரிமை இல்லாத ஒரு ஆதனத்திற்காக தேவையற்றவகையில் காலமும் பணமும் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் வழக்கறிஞர் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | பொறுப்பாளருக்கு இழப்பீட்டிற்கான உரிமை இல்லாமலாக்கப்பட்டிருந்தும் அந்த வழக்கிற்காக வருகை தந்திருந்த வழக்கறிஞருக்கு தொழில்சார் கட்டணத்தின் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்ததுடன் இன்னும் செலுத்தப்படாத தொழில்சார் கட்டணமும் காணப்பட்டது. | |
| (எ) | ஹெரிகப்புகொட அவர்களின் இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் மரணச் சொத்தின் வருமானத்தில் 1/5 பங்கு சேமிக்கப்பட வேண்டும். அந்த சேமிப்பு ரூபா 100,000 ஆக இருக்கையில் அதனை புலமைப் பரிசிலினை வழங்குவதற்கு மற்றும் இடர் நிலைமையின் போது நிவாரணம் வழங்குவதற்கு சேகரிக்கப்பட்டு வைத்திருக்க வேண்டுமெனவும் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்குறிக்கோளினை நிறைவேற்றுவதற்க்காக திணைக்களத்தினால் வருமானம் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரையான 05 ஆண்டுகள் காலத்தில் ரூபா 24,865,439 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,973,088 சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு | ஹெரிகப்புகொட மரணச் சொத்துக்குரிய தோட்டங்களில் வரவு மீதி காணப்பட்டதனால் வருமானத்தில் 1/5 பங்கினை சேமிக்கும் குறிக்கோளினை நிறைவேற்றும் இயலுமை கிடைத்திருக்கவில்லை எதிர்காலத்தில் தோட்டங்களை இலாபம் ஈட்டும் அடிப்படையில் பேணுவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டிருக்கவில்லை. தோட்டங்கள் சம்பந்தமாக முறையான முகாமைத்துவத்துடன் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிகழ்காலத்தில் உரிய தோட்டங்களில் வரவு மீதி காணப்பட்டது எனவும் அதன் காரணமாக மரணச் சொத்து தொடர்பான குறிக்கோளை நிறைவேற்ற முடியாதிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | திறக்கப்படாத 254 இறுதி விருப்பு பத்திரங்களை திறப்பது சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 2,629,250 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவுகளானது டீ.எஸ். டபிள்யூ சமரக்கோன் மரணச் சொத்தின் நிதியைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. அந்த மரணச் சொத்து தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் மரணச்சொத்தாளரினால் தனது இறுதி விருப்பு பத்திரத்தில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்ததனால் இச்செலவுகளை மேற்கொள்ளலானது மரணச் சொத்தாளரின் குறிக்கோள்களுக்கு முறணானது என்பது அவதானிக்கப்பட்டது. | நீதிமன்ற செயற்பாடுகளின் இறுதியில் இறுதி விருப்பு பத்திரத்திலுள்ள ஆதனங்களிலிருந்து மீள்நிரப்பல் செய்யும் அடிப்படையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் தற்றுணிபின் பேரில் உரிய மரணச் சொத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. | மரணச் சொத்தாளரினால் இறுதி விருப்பு பத்திரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் மரணச் சொத்து ஆதனங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஐ) | 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மீதியின் மொத்தம் ரூபா 14,950,471 வரவு மீதி உருவாகும் வைகயில் 10 நம்பிக்கைப் பொறுப்புகள்/ மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 6 நம்பிக்கைப் பொறுப்புக்கள்/ மரணச் சொத்துக்கள் தொடர்பாக | பிரமுக வங்கியில் மேற்கொண்ட முதலீட்டிற்காக உரிய முறைப்படி வட்டி கிடைக்காமையும், வாரிசுக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டமையும், மரணச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் போது செலவு செய்ய வேண்டி ஏற்பட்டமையும் காரணமாக இந்த வரவு மீதி | ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பு/ மரணச் சொத்திற்காக கிடைக்கும் வருமான எல்லைக்குள் செலவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 1,325,505 தொகையான வரவு மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காக அந்த மரணச் சொத்துக்களின் முதலீடுகள் எதுவும் இருக்கவில்லை. | உருவாகியுள்ளது. முதலீட்டு வருமானத்தையும் வீட்டு வாடகை வருமானத்தையும் அதிகரிப்பதன் மூலம் அந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஒ) | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய பிரிவுகளுக்கு தனித் தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவிற்குமாக தனித்தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய பிரிவுகளுக்கு தனித்தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஓ) | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்வதற்கு இந்த அறிக்கைத் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்வது சம்பந்தமான சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் எதில்காலத்தில் இந்த நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் மரணச் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்திக குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் 05 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் சுகாதார மேம்பாடு மற்றும் பிராந்திய சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் ஆகிய குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் செயலாற்றல் முறையே 24 சதவீதம் மற்றும் 47 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பொருளாதார சிக்கலின் காரணமாக பல்கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலைகள் அதிக காலம் மூடப்பட்டதன் காரணமாக பாடசாலைகளுக்கு அனுப்பிய வவுச்சர்கள் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்படாமை திணைக்களத்திற்கு | இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைக்கின்ற விண்ணப்பங்களைக் கருத்தில் கொண்டு மருத்துவ உதவிகளைச் செலுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் விண்ணப்பப்படிவங்கள் உரிய காலத்தில் கிடைக்காமையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. வருடம் முழுவதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் வருடம் முடிவடைவதற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பினை முடிவுறுத்துதல் ஆகிய காரணங்கள் செயலாற்றல் மட்டம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. இந்த ஆண்டிற்குள்ளேயே உரிய மதிப்பீடு செய்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியிணியினர் 87 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியினர் 67 ஆக இருந்தது. அதற்கிணங்க 19 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து மொழிபெயர்ப்பாளர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | மொழி பெயர்ப்பாளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஒரு ஆண்டு காலத்திற்காக பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் நிருவாக உத்தியோகத்தரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. மொழிபெயர்ப்பாளர் சேவையில் மற்றும் ஒருங்கிணைந்த சேவையிலுள்ள ஏனைய வெற்றிடங்கள் தொடர்பாக PACIS மென்பொருளினூடாக நாளது | வெற்றிடங்கள் துரிதமாக நிரப்பப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரையாக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகள் ஒரு சேவை நிலையாத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 5 ஆண்டுகளை மிகைத்த 18 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் 17 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற குழு- 2) சேவையிலுள்ள திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாகும். எனவே அவர்களுக்கு இடமாற்றம் வழங்கும் இயலுமை இல்லாததுடன் தற்பொழுது அந்த உத்தியோகத்தர்களில் மூன்று நபர்கள் முகாமைத்துவ சேவை பரீட்சையில் (மட்டுப்படுத்தப்பட்டது) சித்திடைந்து ஏனைய அலுவலகத்திற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய சேவையைச் சார்ந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்தும் மிகக் குறைந்த அளவானவர்களுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இடமாற்றம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை அந்த அலுவலகங்களுக்கு விடுவித்தல் இடம்பெற்றுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் இடமாற்றம் வழங்கப்படுதல் வேண்டும். |